# பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நானாடகத் தொகுதியில் புலப்படும் வாழ்வியல் அம்சங்கள் - பின்காலனிய நோக்கிலான ஓர் ஆய்வு

LIBRARY
0 3 NOV 2020
EUSL SRI LANKA

ஆய்வாளர் : புவிராஜசிங்கம் கம்சத்வனி

பதிவிலக்கம் : $EU/PGS/2018/MA(D\&T)/03$

சுட்டிலக்கம் : $PGS/MA(D\&T)/202$

முதுகலைமாணி நாடகமும் அரங்கியலும் பட்டத்தேர்வின் ஒரு பகுதியை நிறைவு செய்யும் முகமாக கிழக்குப்பல்கலைக்கழக கலைகலாசார பீடத்தின் நுண்கலைத் துறைக்கு 2019ஆம் ஆண்டு இவ்வாய்வு சமர்ப்பிக்கப்படுகின்றது.

MA31
Thesis
Library - EUSL

நுண்கலைத்துறை
கலை கலாசாரபீடம்
கிழக்குப்பல்கலைக்கழகம்
இலங்கை

2019

PROCESSED
MAIN LIBRARY, EUSL

# ஆய்வுச்சுருக்கம்

ஈழத்துத் தமிழ் அரங்கவரலாறானது பல்வேறு வளர்ச்சி கட்டங்களினூடாக வெவ்வேறு விதமான ஆளுமைகளுடன் நகர்ந்து இன்று பரிணாம வளர்ச்சி அடைந்து முக்கியமான ஒரு அரங்காக விளங்குகின்றது. இத்தகைய ஈழத்து அரங்க வரலாற்றின் வளர்ச்சிக்கு அரங்கவியலாளர்களினதும், ஆளுமையாளர்களினதும் செயற்பாட்டினது உத்வேகத்தின் தாக்கம் என்று கூறலாம். இதன்அடிப்படையிலே உத்வேக தன்மையுடையவராகவும், ஈழத்து அரங்கிற்கு ஒரு திருப்புமுனையை ஏற்படுத்தியவராகவும் பேராசிரியர் க.கணபதிப்பிள்ளை விளங்குகின்றார்.

பேராசிரியர் யாழ்ப்பாணத்தின் சமூக நிலையிலே உயர்ந்தோர், தாழ்ந்தோர், நடுத்தர வகுப்பினர் என்ற பல பிரிவைச் சேர்ந்தவர்களோடு பழகி அவர்களின் மனப் போக்குகள் சிந்தனைகளை எல்லாம் அவர் நன்கு அறிந்திருந்தார். இந்த அனுபவ அறிவாலும் உள்ளுணர்வாலுமே தமக்கு எனத் தனிப்பாதை வகுத்து அப்பாதையில் உயர்ந்த நாடகங்களை ஆக்குதல் அவர்க்கு எளிதாயிற்று. இதன் அடிப்படையிலே பேராசிரியரது சமூக நாடகங்கள் அமைந்து காணப்படுகின்றது.

பேராசிரியரது சமூக நாடகங்களைக் காலவரன் முறையில் ஒழுங்குபடுத்திப்பார்க்கும் பொழுது நானாடகத்தினூடாக யாழ்ப்பாணத்தின் சமூக, பொருளாதார, அரசியல், பண்பாடு போன்றவை தெளிவாகப் புலப்படுவதனூடாக இவ் ஆய்வானது "பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நானாடகத் தொகுதியில் புலப்படும் வாழ்வியல் அம்சங்கள் - பின்காலனிய நோக்கிலான ஓர் ஆய்வு" எனும் தலைப்பில் மேற்கொள்ளப்பட்டது.

பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நானாநாடகத் தொகுதியினை ஆய்வு செய்வதன் மூலம் அவரின் நானாடகத்தில் வெளிப்படும் வாழ்வியல் அம்சங்களை ஆராய்ந்து அவற்றை பின்காலனிய நோக்கில் வெளிக்கொண்டு வருவதோடு, அவற்றின் முக்கியத்துவம் பற்றியும் ஆராய்வதே இவ் ஆய்வின் பிரதான நோக்கமாகும்.

இதனடிப்படையில் நானாடகத்தில் பல்வேறுபட்ட வாழ்வியல் அம்சங்களை அதாவது ஒரு மனிதனுக்கு அத்தியவசியமான தேவைகள், பழக்கவழக்கங்கள், சடங்குகள், சம்பிரதாயங்கள், உறவுமுறைகள், நம்பிக்கைகள், பண்பாடு, கலாச்சாரங்கள், கல்வி, அந்தஸ்து, உத்தியோகம் இவ்வாறனவற்றை பேராசிரியர் வெளிக்காட்டியுள்ளார். மற்றும் பேராசிரியர் தனது நாடகங்களினூடாக காலஓட்டத்தை உணர்வு பூர்வமாக சித்தரித்துக்காட்டியுள்ளது அவரது நாடகங்களின் சிறப்பம்சங்களாகும். பேராசிரியரது நாடகங்கள் காலஓட்டத்தை வெளிக்காட்டுவது மட்டுமன்றி அக் காலத்தில் கூறியவை இக் காலத்திற்கும் பொருந்தும் வகையில் முன் கூட்டியே கருத்துக்களை நாடக கருவினாலும், நாடகபாத்திரத்தினூடாகவும் வெளிப்படுத்தியுள்ளதை அவரது நாடகத்தை ஆராய்வதன் மூலம் அறிய முடிகிறது.

காலனித்துவ தாக்கத்தினால் ஆங்கிலக் கல்வி மோகம், அரசாங்க உத்தியோகம், போலி கௌரவம், வகுப்புப் பார்த்தல், சமுதாய அந்தஸ்து, மத்தியதர வர்க்கத்தினரிடம் சமூகத்தினரை ஏற்றத் தாழ்வுடன் பார்க்கும் பண்பு போன்றவை உருவாகி அதாவது எமக்குரிய மரபுகள், பண்பாடுகள் மாற்றமடைந்து, மறுக்கப்பட்டநிலையில் காலனித்துவத்தின் போக்கிற்கேற்ப எமது சமூகமானது நாகரீகம், ஆடம்பரம், செம்மையாக்கம் என்ற மாயைக்குள் சிக்கி காணப்பட்டனர். இத்தகைய போக்கில் இருந்து பண்பாட்டு அடையாளம் பற்றிய விழிப்பையும், எமக்குரிய மரபையும் எமக்குரியதாக மீட்டெடுக்க வேண்டும் என்பதற்காக பின்காலனிய போக்கில் பேராசிரியர் தனது நாடகத்தை நகர்த்தி சென்றுள்ளார். இதனை இவ் ஆய்வில் விளக்க முறையியல், பகுப்பாய்வு முறையியல், பண்புசார் அணுகமுறையோடு(Qualitative) விபரண ஆய்வு அணுகுமுறையுடன் மேற்கொண்டதனூடாக வெளிக்கொணரமுடிகின்றது.

## பொருளடக்கம்


பக்கம்

- நன்றியுரை i
- முகவுரை ii
- ஆய்வுச்சுருக்கம் iii - iv
- பொருளடக்கம் v - vii

**இயல் - 01**

1.0 ஆய்வு அறிமுகம் பின்னணியும் 1 - 7

1.1 ஆய்வுத் தலைப்பு

1.2 ஆய்வுப் எல்லை

1.3 இலக்கியமீளாய்வு

1.4 ஆய்வுப்பிரச்சினை

1.5 ஆய்வு வினா

1.6 ஆய்வு நோக்கம்

1.7 ஆய்வு முறையியல்

1.8 ஆய்வு அணுகுமுறை

1.9 ஆய்வுத்தரவு

1.10 ஆய்வுப்பகுப்பு

**இயல் - 02**

2.0 ஈழத்து தமிழ் நாடக அரங்க வரலாறு 8 - 16

2.1 ஈழத்து தமிழ் நாடக அரங்கவரலாற்றின் வளர்ச்சிப்போக்குகள்

2.1.1 கூத்தரங்கு

2.1.2 இசைநாடக அரங்கு

2.1.3 நவீன அரங்கு

இயல் - 03

3.0 ஈழத்து அரங்கில் பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை 17 - 30

3.1 பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை பற்றிய அறிமுகம்

3.2 பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையின் நாடகங்கள்

3.3 பேராசிரியர் க. கணபதிப்பிள்ளை நாடகங்களில் கையாண்ட உத்திகள்

3.4 பேராசிரியர் க. கணபதிப்பிள்ளையும் ஏனைய கலைகளும்

இயல் - 04

4.0 ஈழத்தமிழரது வாழ்வியலும் காலனித்துவ, பின்காலனிய போக்கும் 31 - 55

4.1 வாழ்வியல் அறிமுகம்

4.2 வாழ்வியல் கூறுகள்

4.2.1 பண்பாடு

4.2.2 சடங்கு

4.2.3 உறவுமுறை

4.2.4 பழக்கவழக்கம்

4.2.5 சாதியமைப்பு

4.3 காலனியம் பற்றிய அறிமுகம்

4.3.1 காலனியத்தின் தோற்றம்

4.3.2 காலனியத்தின் வளர்ச்சி

4.3.3 நவகாலனியம்

4.4 பின்காலனித்துவம்

4.5 பின்காலனித்துவத் திறனாய்வாளர்கள்

4.5.1 எட்வர்டு சையத்

4.5.2 காயத்திரி சக்கரவர்த்தி ஸ்பிவாக்

4.5.3 ஹோமிபாபா

இயல் - 05


5.0 பேராசிரியர் க.கணபதிப்பிள்ளையின் நானாடகத்தில் புலப்படுத்தும் வாழ்வியல் அம்சங்களும் பின்காலனிய நோக்கும் 56 - 100

5.1 வாழ்வியல் அம்சங்களும் பின்காலனிய பார்வையும் ஓர் அறிமுகம்

5.2 உடையார் மிடுக்கு

5.2.1 உடையார் மிடுக்கு நாடகத்தின் கதைக்கரு

5.2.2 உடையார் மிடுக்கு நாடகமும் பின்காலனிய போக்கும்

5.3 முருகன் திருகுதாளம்

5.3.1 முருகன் திருகுதாளம் நாடகத்தின் கதைக்கரு

5.3.2 முருகன் திருகுதாளம்நாடகமும் பின்காலனிய போக்கும்

5.4 கண்ணன் கூத்து

5.4.1 கண்ணன் கூத்து நாடகத்தின் கதைக்கரு

5.4.2 கண்ணன் கூத்து நாடகமும் பின்காலனிய போக்கும்

5.5 நாட்டவன் நகரவாழ்க்கை

5.5.1 நாட்டவன் நகரவாழ்க்கை நாடகத்தின் கதைக்கரு

5.5.2 நாட்டவன் நகரவாழ்க்கை நாடகமும் பின்காலனிய போக்கும்

- முடிவுரை 101 - 104
- நூற்பட்டியல்